# மாதர் மனோரஞ்சனி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

| VOL. 2. | MADRAS: JUNE 1900. | No. 4. |
|---|---|---|
| புத்த. ௨. | சென்னப்பட்டணம், 1900 - ௵ ஜூன்-மீ. | இல. ௪. |

## மாயாபுரி விநோதக்கதை.

(58-ம் பக்கத்தொடர்ச்சி)

அந்தப்பெண்ணுக்கு மிப்பொழுது வயதாகிறது. பிள்ளைபெண்ணிருவர்க்குமிது விவாகஞ் செய்யத்தகுந்த பருவமாயிருப்பதால், நாமிருவரும் அவிநாசிக்குப்போய் விசாரிக்கலாகாதோ வென்றாள். ஐயரவர்கள், பெண்ணே அக்காலத்திலிந்த ஸ்திதியிலிருக்கிறோமென்றவர்களறியார்கள். மந்திரி ஸ்தானத்திலிருப்பதாகவே பாவித்துக்கொண்டு சம்பந்தஞ் செய்ய விரும்பினார்கள். இப்பொழுது நமது நிலைமையவர்களுக்கு நன்றாய்த்தெரியுமாதலால் நம்மை இலட்சியஞ் செய்யார்கள். அந்த ஊரிலுனக்கும் பந்துக்களிருக்கிறார்கள்; எனக்கு மிருக்கிறார்கள்; இந்த ஸ்திதியோடு அவர்கள்முன் செல்ல என் மனது கூசுகின்றது. அவ்விடஞ்சென்றால் நமக்குக் கட்டாயமாய் அவமானம் நேரிடுமாதலால் அது உசிதமல்ல அவ்வெண்ணத்தைவிட்டுவிடு என்றார். விஜயலட்சுமி, சுவாமீ ஆபத்து, சம்பத்து இரண்டும் யாவருக்கும் உள்ளதுதானே! அதற்காக உறவு ஜனங்களையிழந்துவிடலாமோ? போய்க் கேட்டுப் பார்ப்போம் கொடுத்தால் விவாகம் செய்துகொள்வோம், இல்லையென்றால் திரும்பி வந்துவிடுவோம். இதில் அவமானமென்பது எனக்குத் தோன்றவில்லை; ஆகையால் நாம் அவசியம் புறப்பட்டுப் போகவேண்டும் என்றாள். ஐயரவர்கள் பெண்ணே! இது வரைக்கும் நீ என் சொல்கடவாமல் நடந்துவந்தாய்; இன்று பிடிவாதஞ் செய்கின்றாய். இது என்னத்திற்கென்று தெரியவில்லை. தெய்வச்செயல் என்ன, விஜயலட்சுமி சுவாமீ ஒன்றும்வாராது, அவசியம் போகத்தான் வேண்டுமென்றாள். அப்படியானால் உன்னிஷ்டம்போலாகட்டும்; விதிவசத்தை யாவர் கடப்பார்? ஒருதரம் போய் வந்தாலல்லாமல் உனக்குப்புத்தி வாராது; போவோம் என்றார். விஜயலட்சுமி என்று புறப்படுகிறதென்ன,

ஐயர் அடுத்த திங்கட்கிழமை புறப்படுவோ மென்றார். இன்னம் நாலுநா ளிருக்கிறதேயென்று அவளும் சும்மாவிருந்தாள். சற்று நேரத்திற்கெல் லாம் அயர்ந்து நித்திரை போனார்கள். இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த ஜகதீசன் தனக்கு மணம் பேசப்போவதைக்குறித்துச் சந் தோஷமடைந்தான். மங்களாம்பாள் முகத்தை யெப்பொழுது பார்ப்போ மென்று கருதி மனம் வருந்தினன். ஒருக்கால் அப்பா போகவேண்டா மென்று கட்டாயப்படுத்திப் பிரயாணத்தை நிறுத்திவிட்டால் என்ன செய்கிறதென்று கலங்கினன். இப்படியாகப் பலபலயோசனையாலே யிரா முழுதுந் தூக்கம் பிடியாமலிருந்தான். விடிந்தவுடன் யாவருமெழுந்திரு ந்து தத்தம் வேலையிற்புகுந்து பகலிலுண்டு களைப்பாற வுட்கார்ந்தவுடன் பிள்ளையவர்களும், மஹாலட்சுமி முதலியவர்களும் வந்துட்கார்ந்தபொழுது பிள்ளையவர்கள் சுவாமி எந்நாளும் போலல்லாமலின்று தமது திருமுகம் வாடியிருப்பதேன்? என்னிடம தெரிவித்தாலது நிவிர்த்தியா மார்க்கத் தைக் கூடியவரையில் முயலலாமென்ன, ஐயரவர்கள் மற்றொன்றுமில்லை; விஜயலட்சுமி ஜகதீசன் விவாகத்துக்குப் பெண் கேட்கும்படி அவிநாசிக்கு ப்போக வேண்டு மென்று பிடிவாதமாயிருக்கிறாள். கொங்குநாட்டில் அவிநாசியென்றொரு நகரமுண்டு. அதில் எனக்குப் பெரியதாயார் புத் திரி விசாலாட்சியென்பவள் செல்வசம்பத்தோடு வாழ்ந்து வருகிறாள். அவள் என் வீட்டில் வளர்ந்தவள்; என் தந்தையார் அவளுக்கு மிகுந்த திரவியமுங் கொடுத்து விவாகஞ் செய்தனுப்பினர், அவள் என்னிடம் பிரியமுள்ளவள். சில வருஷங்களுக்கு முன் அவள் பிரசவித்திருக்கிறாளெ ன்று நான் பார்க்கப்போனேனல்லவா? அப்பொழுது என்னிலைமை அவளுக்குத் தெரியாது. அக்காலத்தில் அவளும், அவளுடைய கணவனும் தமது புத்திரி மங்களாம்பாள் என்னும் பெண்ணை நமது ஜகதீசனுக்கு விவாகஞ் செய்து கொடுப்பதாக வாக்குத்தத்தஞ் செய்தார்கள். அந்தப் பெண்ணுக்குக் கல்யாணபருவம் வந்தபடியால் அதை விசாரித்து மணம் புரியவேண்டு மென்றாள். இப்பொழுது நமது நிலைமையவர்களுக்கு நன் றாய்த் தெரிந்திருக்குமாதலால் நம்மையவர்கள் மதிப்பார்களோ? அது பற்றியே கவலைப்படுகிறேனென்றார். இது கேட்ட பிள்ளையவர்கள், மஹா லட்சுமி முதலியவர்கள் சுவாமி இதைப்பற்றிக் கவலைப்படுவானேன், போய்க்கேட்டுப்பார்த்து கொடுத்தால் விவாகஞ் செய்வோம், இல்லையெ ன்றால் திரும்பிவிடுவோம், இதைப்பற்றி யோசிப்பானேன்! அவசியம் போய்வருகிறது என்று ஒரே மாதிரியாகச் சொன்னார்கள்.

ஐயரவர்கள் புன்முறுவல்பூத்து, பிள்ளையவர்களே! உலகத்தார்கள், கல்வியையும், குணத்தையுங்கவனிப்பதில்லை, பொருளொன்றையே பெரி

தாக நினைக்கிறார்கள்; உறவு, சிநேகம், என்பதவர்களுக்கில்லை, பணமுள்ளவனே பெரியவன்; அவனேயுறவு, அவனே சிநேகம்; அவனே குரு, அவனே தெய்வம். பணமுள்ளவ்ன் ஈனஜாதியானாலும் அவனுக்கு மரியாதை செய்வதும், உயர்குலத்திற் பிறந்தவனானாலும் காசில்லா விட்டால் அவனை யீனஜாதிக்குரிய மரியாதை செய்வார்கள். இதுபற்றியே "பொன்னொடுமணி யுண்டானாற் புலைஞனுங்கிளைஞரென்று, தன்னையும் புகழ்ந்து பேசிச்சாதியின் மணமுஞ்செய்வார், மன்னராயிருந்தபேர்கள் வகைகெட்டுப்போவராகில் பின்னையுமாரோவென்று பேசுவாரேசுவாரே" என்று பெரியோர் கூறினார்கள். தனமுடையவனெவ்வளவிழிந்த ஜாதியானாலும், அவனை மகோத்தமனாகக்கருதி யவனோடு சம்பந்த முதலியசெய்து மகிழ்வதும், பிரபுக்களாயிருந்தவர்கள் எளியவராய்விட்டால் அவனை மிகுதியுமலட்சியஞ்செய்து இகழ்கின்றார்கள். "ஆலிலை பூவுங்காயுமளிதருபழமுமுண்டேல், சாலவே பட்சியெல்லாந்தங் குடியென்றேவாழும், வாலிபர் வந்து வந்து வந்திப்பார் கோடி கோடி ஆலிலையாதிபோனாலங்கு வந்திருப்பாருண்டோ?" ஓர் ஆலமரமானது தளிர், பூ, பிஞ்சு, காய், பழங்களுடன் கூடி செழித்திருக்குங் காலத்தில், பலவகையான பட்சிகளும் வந்து அம்மரத்தைத்தமக்குச்சொந்தவாசஸ்தானமாகக்கொண்டு மகிழ்ந்திருக்கும், கோடி கோடியான வாலிபர்கள் வந்து காத்திருப்பார்கள். மிருகங்களும் தமதிருப்பிடமாகக்கொண்டு நிழலில் தங்கியிருக்கும். இலைமுதலியன அற்றுப்போன காலத்திலதைத் திரும்பிப்பார்ப்பாரொருவருமில்லை. இதேமாதிரியாகத்திரவியமுள்ள காலத்தில் முன்பின்னறியாதவர்களும் ஏதாவதோர் உறவு கூறிக்கொண்டு வந்தடைவார்கள். தனமற்றகாலத்தில் நம்மாலாதரிக்கப்பட்டு வந்தவர்களும் அயலாரைப்போல நினைத்து ஒதுங்கிப்போவார்கள். உறவினரெல்லாம் பகைவர்போலாகிறார்கள். கூடப்பிறந்தவர்களோ ஜன்மசத்துருவாகிறார்கள். மனதுக்கும், செவிக்கும் பேரானந்தமுண்டாகும்படி யினியவசனங்கள் கூறி, இகபரசாதகமான நன்மை யெடுத்துச்சொல்கின்ற விற்பன்னசிகாமணியானாலும் அவனது அமிர்தவசனங்களை ஆலகால விஷம்போல நினைத்துப்பாராமுகஞ்செய்கிறார்கள். வேட்டை நாய்போற்சீறி மேலேவிழுந்து, அடித்துதைத்து, கர்னகடூரமாயும், மானங்கெடுவதுமான வசனங்களைக் கூறினாலும் அவன் தனவந்தனாயிருந்தால் அவன் பாதசேவை செய்துகொண்டு கைகட்டிக்காத்துக்கொண்டிருக்கிறார்கள். "இன்சொல்லன்றாழ்நடையனாயினு மொன்றில்லானேல், வன்சொல்லினல்லது வாய்திறவா—என் சொலினும், கைத்துடையான் காற்கீழொதுங்குங் கடன்ஞாலம், பித்துடையவல்லபிற" என்றபடி, அமிர்தவசனமும், பணிந்த நடையுமுடைய குணசீலனாயிருந்தாலுமவனிடத்திற் கடுஞ்சொற் பிரயோகஞ்செய்வதும், தனவானென்ன சொன்னாலுமவனுடைய பாதத்திற் பணிந்துகிடப்பது முலகவிய

ற்கையாம். “கல்லானேயானாலுங்கைப்பொருளொன்றுண்டாயி, னெல்லாரும் வந்தங்கெதிர்கொள்வார்—இல்லானை, யில்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்ததாய் வேண்டாள், செல்லாதவன் வாயிற்சொல்.” என்றபடி கல்விமணங்கண்டறியாதவனானாலுங் கைப்பொருளுண்டானால், அவனைக்காதவழி தூரமெதிர்கொண்டு போயழைப்பதும், அவனுக்கிராஜோபசாரஞ்செய்வது முலகவியற்கையாம், பொருளில்லானைப்பெற்றதாயும், கொண்டமனைவியுமதிக்கமாட்டார்களென்றால் மற்றவரென்ன செய்வார்கள்! துரும்புக்குமதியாரன்றோ? பெற்றதாயும், மனைவியுமதியார்களாயின், சகோதரி மதிப்பாளோ? “மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல, வுறவுமுயர் குலமுமெல்லாம்,—திருமடந்தை, ஆம்போதவளோடாகுமவள் பிரிந்து, போம்போதவளோடும் போம்!” என்ற நீதிவாக்கியப்படி, திருமகள் கடாட்சமாகிய செல்வமுண்டாங்காலத்திலேயே, குலம், குணமுதலியவைபயன்படுவதும், சுற்றத்தார் சூழ்ந்திருப்பது நேரும். அஃதில்லாதபோதொன்றுமில்லையாம். தனமுள்ளகாலத்தில் நம்மையண்டிப்பிழைத்த ஏவலாளர்கூடத் தனமில்லாத காலத்தில் பாராமுகஞ்செய்வதுமன்றி யிகழ்ந்து முறைப்பார்கள். செல்வமுடையவர்களோ! “செல்வம்வந்துற்ற காலைத்தெய்வமுஞ்சிறிதுபேணார், சொல்வனவறிந்து சொல்லார் சுற்றமுந்துணையு நோக்கார், வெல்வதேகருமமல்லால் வெம்பகைவலிதென்றெண்ணார், வல்வினை விளைவு நோக்கார் மண்ணின்மேல் வாழுமாந்தர்” என்றபடி தமதுதனமதத்தினால் தெய்வத்தையுமதிப்பதில்லை. தாய் தந்தையரைக்கனப்படுத்துவதுமில்லை. உறவினரென்றும்சிநேகரென்றும்நினைப்பதேயில்லை. நல்லோர் பெரியோரென்று எண்ணுவதுமில்லை, தம்மையே பெரியவராகக்கருதித்தமது வசனங்களையே மேன்மையாகக்கொண்டு மகிழ்வார்கள். ஜனங்களும் அவனது வசனங்களையே வேதவிதியாகக்கொண்டு நடப்பதேயன்றி மற்றொன்றையுங்கவனியார்கள். இது உலக சுபாவம். பலபல பேசிப்பயனென்ன? இப்பொழுது நாமேழ்மையடைந்திருக்கிறோம். சகோதரி செல்வச்செருக்கிலமிழ்ந்திருக்கிறாள். அந்தச்செல்வமோ நம்மாலடையப்பட்டது. அதையவள் கவனியாள் அவ்வூரிலுள்ள சுற்றத்தாரும் அவர்கள் பட்சமாய்ப் பேசுவார்களேயன்றி நம்மைப்பொருட்படுத்திப்பேசமாட்டார்கள். அங்கே போனால் அவமானமுண்டாவதுமன்றி மனதுக்கு வருத்தமுமுண்டாகும். ஆதலால் எனக்குச் சம்மதமில்லையென்று முடித்தனர்.

விஜயலட்சுமி சுவாமீ! தேவரீர் கூறுவதெல்லாம் நியாயமே; ஆனாலும் விசாலாட்சி அப்பேர்ப்பட்ட குணமுள்ளவளல்ல: அவள் கணவனும் நம்மிடத்தில் அதிக அன்புள்ளவர். எனது சுற்றத்தாரும், தமது பந்துக்களும் பலரிருக்கிறார்கள், அவர்களெல்லோரும் நமக்கு விரோதமாய்ப் பேசுவா

ர்களோ? புஜங்காபுரியில் எனக்கு தோழியாயிருந்த மூத்தம்மாளும் நமது வீட்டில் வேலை செய்துக்கொண்டிருந்த கமலியின் பெண் நாகம்மாளும் அவ்வூரில் வாழ்க்கைப் பட்டிருக்கிறார்களே? அவர்கள் எல்லாரும் நமக்கு எதிரியாயிருப்பார்களோ? நாமிந்த விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டுவதேயில்லை. நமக்குப்பதிலாக அவர்களே பேசிக் காரியத்தைமுடித்துத்தருவார்கள். நமக்கொரு குறைவும் வராது. விசாலாட்சியம்மாள் தன்சொல்லைமீறுவாளோ? அந்தப் பெண் நமது ஜெகதீசனுக்கே மனைவியாமென்பதிலேயமில்லை. தவிர நமது புத்திரனுக்குப் பருவம் வந்துவிட்ட படியால் மணம்புரிவிப்பது அவசியந்தானே; வேறெங்காவது பெண் பார்க்கவேண்டிய கடமை நமக்குள்ளதே. உறன்முறையல்லாதவரிடத்திற்போயவமானம் வந்தால் அது நன்மையாமோ? அதைவிட நமது பந்துக்களிடத்தில் அவவானமடைந்தாற் குறைவாகுமோ? நாம் போனால் அவசியம் காரியம் பலிக்குமென்றெண்ணுகிறேன். அப்புறந்தமது சித்தமென்றாள். பிள்ளையவர்களும் மற்றவர்களும் கேட்டுப் பார்க்கலாம், அதனாற் குறைவு வாராதென்றார்கள். ஐயரவர்கள், ஆனதாகட்டும், உங்கள் கருத்தின்படியே திங்கட்கிழமை காலைப்புறப்பட்டுப் போகிறேனென்று கூற, மற்றவர்களும் அதுவே சரியென்று சொல்லினார்கள். பிள்ளையவர்களும்பிரயாணத்துக்குத்தயார் செய்யலானார். விஜயலட்சுமியும், ஜகதீசனும் திங்கட்கிழமை யெப்பொழுது வருமென்றெதிர்நோக்கி, ஒரு நிமிஷத்தை யொருயுகமாகக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

திங்கட்கிழமை விடிய ஒரு நாழிகைக்கு முன்னமே வண்டி தயாராயிருந்தது. சிவசுவாமி ஐயரவர்கள், விஜயலட்சுமி, ஜகதீசன் மூவரும் வண்டியிலேறிக்கொண்டு புறப்பட்டார்கள். வழியில் தங்குமிடங்களில் தங்கி, அங்கங்குள்ள விசேஷங்களைப் பார்த்துக்கொண்டு எட்டா நாள் விடியற்காலம் அவிநாசியைக்கிட்டினார்கள். விசாலாட்சி வீட்டுக்கிட்டவருங்காலத்தில் கண்ட சிலர்போய் விசாலாட்சிக்கறிக்கை யிட்டார்கள். மங்களாம்பாள் மாத்திரமிந்தச்சேதி கேட்டதும் மகிழ்ச்சியோடும் வெளியிலோடிவந்து மாமா வாருங்கள், அம்மாமி வாருங்களென்று மரியாதையாயழைத்தாள். அவர்கள் மூவரும் வண்டியினின்று மிறங்கி யுள்ளே நுழைகையில் மங்களாம்பாள் விரைந்து சென்று அம்மா! மாமாவும், அம்மாமியும் வருகிறார்களென்று சொல்ல, விசாலாட்சி, இது ஒரு அதிசயமா? வந்தால் வரட்டும். நீயேன் வீணுய்க்குதிக்கிறாயென்று அதட்டிப் பேசிவிட்டுக், கவனியாதுபோலிருந்தாள். மூவருமிதைக்கேட்டுக் கொண்டேயுள்போய்ச்சிறிது உட்கார்ந்திருந்தார்கள். பின்பு தாங்கள் கொண்டுபோன மஞ்சள், குங்குமம், பாக்குவெற்றிலை, பழம்முதலியவற்றை யெடுத்து மங்களாம்பா! ஒரு

தாம்பாளங் கொண்டுவா என்று சொல்ல அவள் தாயாரிடம் போய் அம்மா!
மாமா தாம்பாளம் கேட்கிறார் என்ன, மாமா உனக்குச்சீர்கொண்டு வந்தாரா?
அதோ இருக்கிற தாம்பாளத்தை யெடுத்துக்கொண்டு போவென்று பரிகா
சமாய்ச் சொல்லிச்சும்மா இருந்தாள். மங்களாம்பாள் தாம்பாளங் கொண்டு
வர, அதில் தாம் கொண்டுவந்த கூற்றை வைத்துக் கொடுத்துவிட்டு ஒரு
வர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு முகம் வாடியிருந்தார்கள். ஒரு
நாழிகைக்குப் பிறகு விசாலாட்சி வெளியில் வந்து அண்ணா! மதனீவந்
தீர்களா? உங்கள் அத்தானுக்கு அவசரமாய் வெளியிற் போகவேண்டுமாம்
அதற்காகச் சமையல் செய்து கொண்டிருக்கிறேன். வேலையொழியவில்லை
யென்று சொல்லிவிட்டு மறுபடியுமுள்ளே போய்விட்டாள். ஒரு நாழிகைக்
குப்பின்பு விசாலாட்சி கணவன் தப்புசாமி ஐயர் மெத்தையினின்றுமிறங்கி
வந்து ஸ்நானஞ் செய்யப்போனார். மங்களாம்பாள் அப்பா! மாமா, அம்
மாமிமுதலானவர்கள் வந்திருக்கிறார்களே; பாராதுபோல வந்துவிட்டீர்
களே நன்றாயிருக்குமாவென்றாள். குப்புசுவாமி ஐயர் குழந்தாய் என்வேலை
யுனக்குத்தெரியுமா? அவர்கள் வந்தாலென்ன? என்று சொல்லிவிட்டு,
மனைவியையழைத்து, உன் தமையன் வந்திருக்கிறாராமே! என்னத்திற்காக
வந்தார்! என்று கேட்டார். அதற்கு விசாலாட்சி, சிலகாலத்திற்குமுன்
மங்களாம்பாளை அவர் பிள்ளைக்குக் கொடுப்பதாக விளையாட்டுக்காகச்
சொன்னேன், அதை மெய்யென்று நம்பிப் பெண் கேட்கவந்திருக்கிறாப்
போலிருக்கிறதென்று சொல்லிக்கலீரென்று நகைத்தாள். குப்புசுவாமி
ஐயர் விசாலாட்சி உன்கருத்தென்னவென, அவர் அக்காலத்தில் மந்திரியுத்
தியோகத்திலிருந்தபடியால் கொடுப்பதாகச் சொன்னேன். இப்பொழுது
அவர்கள் வீடுவாசலையும், சகலபொருள்களையுமிழந்து, அரசனுக்கினைக்குப்
பயந்து ஒளிந்து, ஓர்வேளாளன் சோற்றைத்தின்று காலங்கழிக்கின்றார்கள்.
இப்பொழுது கொடுப்பதெப்படி! நமக்குச்சரியான குடும்பத்தில் சம்பந்
தஞ் செய்தால் நமக்குப் பெருமை; அண்ணனென்கிற உறவுக்காக நமது
பெருமையை யிகழ்ந்துவிடலாமா! எனக்குச்சம்மதமேயில்லை யென்றாள்.
குப்புசாமி ஐயர், பெண்ணே எனக்குமப்படிதான் கருத்து. அவர்களோ!
அரசனுக்குப்பயந்து தலைமறைந்து வாசம்பண்ணுகிறார்கள். இராஜதூதர்கள்
எங்குஞ்சுற்றித்திரிந்து தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆ
த்து வருவது நிச்சயம்; இந்தச்சமயத்தில் நாமெப்படி பெண்கொட
நேரலாம். கூடாத விஷயம், அவர்களோ தங்கள் நிலைமையின்னதென்றறி
யாமற் பெண் கேட்கவந்திருக்கிறார்கள். மங்களாம்பாளோ குழந்தையாத
லால் ஜகதீசன் அழகைக்கண்டு மகிழ்ந்து அவனையே விரும்புகிறாப்போற்
காண்கிறது. வாஸ்தவத்திலவன் அழகானவன்தான். அவனுக்குக்கொடுப்
பதிலெனக்குச் சம்மதந்தான். ஆனால் தற்கால நிலைமையவர்கள் சம்பந்தம்

நமக்கெவ்வகையிலுந் தகாது. யாதாவதொருதந்திரோபாயத்தாலவர்களை யனுப்பிவிடு, என்று சொல்லி ஸ்நானம் செய்துவிட்டு, வஸ்திராலங்காரஞ் செய்துகொண்டு, வெளியில் வந்து ஐயா! நானவசரமாய் வெளியிற்போக வேண்டும், நான் போஜனஞ் செய்துவிட்டு வெளியிற்போய் வருகிறேன். நீங்கள் சாப்பிடுங்களென்று சொல்லிப்போய்விட்டார். சிவசுவாமி ஐயர் பெண்ணே அறிந்துக்கொண்டாயா? அவர்கள் நாமிருக்கிறதையறியாத வர்கள் போலப் பேசினதையும் செய்தமரியாதைகளையும் பார்த்தாயா வென்று கூறித்தலை கவிழ்ந்திருந்தார். அச்சமயம் விசாலாட்சி வந்து ஏனண்ணா! நீங்கள மூவரும ஸ்நானத்துக்குப் போகிறதுதானே, அரை மயில் தூரத்தில் நல்ல குளமொன்றிருக்கிறது, ஸ்நானத்துக்கு வசதியானது சீக்கிரம் போய்வாருங்களெழுந்திருங்கள் என்றாள். இன்றளவும் வெளியிற் போயறியாத விஜயலட்சுமி தன்னைத்தானே நொந்துகொண்டு, குளமெங் கிருக்கிறதென்றாள். நான் குளத்துக்குப்போகிறதில்லை விசாரித்துக்கொ ண்டுபோனால் தெரிகிறது என்றாள். மங்களாம்பாள் நான் போய்க்குளத் தையவர்களுக்குக் காட்டிவிட்டு நானுங்குளித்து வருகிறேன் என்றாள். விசாலாட்சிகண்களில் நெருப்புப் பொறிபறக்க நோக்கி, உனக்குக்குளத் துக்குப்போக வழிதெரியுமோ? என்றைக்காவது போயிருக்கிறாயா? நீ சும்மாகிடவென்று கூறிப்பற்களை நெற நெறவென்று கடித்தாள். அது கண்டு மங்களாம்பாள் நடுநடுங்கி வாய்பேசாமலிருந்துவிட்டாள். சிவ சுவாமி ஐயர், விஜயலட்சுமீ நாம் போய்வருவோம் வாவென்று சொல்லி வருத்தத்தினாற் சிரித்துக்கொண்டிருந்தார். விஜயலட்சுமிக்கு ஒன்றுந் தோன்றாமல் வஸ்திரங்களைச்சுருட்டிக்கையில் வைத்துக்கொண்டு, வெளியிற் புறப்பட்டு வெட்கித்தலைவிதியைநினைத்து வருந்திக்கொண்டு தான் முன்னே செல்ல ஐயர் ஜகதீசன் கையைப்பற்றிக்கொண்டு வாசற்படி கிட்டவரும் போது "விஜயலட்சுமீ! எப்பொழுது வந்தாய், சற்றுநேரத்துக்குமுன்தா னெனக்குத்தெரிந்தது நான் மஹாபாவியானதினாலே யுன்னையெதிர்கொ ண்டழைக்கமுடியாமற் போயிற்று. நீ வந்தசேதி கேட்டவுடனே உங்க ளுக்கு வெந்நீர்போட்டு வைத்திருக்கிறேன். என் பிராணநாதர் வெளிற் போயிருக்கிறார். அவர் வந்ததும் அவரை முன்னிட்டுக்கொண்டு வந்து மாமா குழந்தைகளையு முன்னையுமழைக்கலாமென்றெண்ணி யவர்வருகைக் கெதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தேன். ஸ்நானஞ் செய்யக்குளத்துக்குப் போகிறதாகக் கேள்விப்பட்டழைக்க வந்தேன். என் நாயகர்வரநேரமா யிற்று வெந்நீராறிப்போகிறது சீக்கிரம் வாருங்களென்று" துணிகளைப்பி டுங்கிக் கொண்டு, கையைப்பிடித்தழைத்துக்கொண்டு மூீதம்மாள் போய் விட்டாள்.

———

**தேவதஞ்சரியம்மாள்.**

## ஸிம்பலீன்.
(48-வது பக்கத்தொடர்ச்சி)

உ-வது அத்தியாயம்

பாஸ்துமஸ் இட்டாலியா தேசத்தில் பிலாரியோ என்றசிநேகிதன் வீட்டில் தங்கியிருப்பதாக வுரைத்தோம். பிறகு அங்கே நடந்தவரலாற்றை இப்பொழுது எடுத்துச்சொல்வோம். பிலாரியோ, இயாக்கிமோ, ஒரு பிரேஞ்சுமனிதன் இம்மூவர்களில் ஒவ்வொருவரும் பாஸ்துமஸின் குணாதிசயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் இயாக்கிமோ, பிலாரியோவைப்பார்த்து உன்வீட்டில் பாஸ்துமஸ் ஏன் தங்கும்படியாய் நேரிட்டது? நீங்களிருவரும் எப்பொழுது இஷ்டர்களானீர்கள்? என்று கேட்க, அதற்குப் பிலாரியோ, நானும் அவன் தகப்பனும் ஓரிடத்தில் இராணுவவீரர்களாயிருந்தோம். சில சமயங்களில் எனக்கு அவன் செய்த உபகாரங்களுக்காக, என்னுயிரைக்கொடுத்தாலும் ஈடாகாது. இதோ பாருங்கள்! பாஸ்துமஸ்வருகிறான். அவனை நம்முடைய இஷ்டனாக நினைத்துக்கொள்ளுங்கள், என்று சொல்லிக்கொண்டிருக்கையில் பாஸ்துமஸ் அங்கேவர, பின்வருமாறு சம்பாஷணை நடந்தது:—

**பிலாரியோ:**—இவனை உங்களுடைய சிநேகிதனாக நினைத்துக்கொள்ளவேணும். என்னுடைய சிநேகிதரில் இவன் ஒரு கண்ணியமுள்ள மனிதன். அவனுடைய குணங்களை அவன்முன்பாக நான் விவரிக்கிறதைப்பார்க்கிலும், கொஞ்சநேரத்தில் நீங்களேயறிந்து கொள்வீர்கள்.

**பிரேஞ்சுமனிதன்:**—ஆர்லியன்ஸ் என்னும் ஊரில் நாங்கள் ஒருவரையொருவர் நன்றாய் அறிவோம்.

**பாஸ்துமஸ்:**—நீ எனக்குச்செய்த உபகாரத்தை யொருபொழுதும் மறக்கமாட்டேன். ஏதாவது சமயம் கிடைத்தால் பிரதியுபகாரம் செய்யச்சித்தமாயிருக்கிறேன். இது வரையில் சமயம் கிடைக்கவில்லையே. நான் என்னசெய்வேன்.

பிரெஞ்சு:—அற்பகாரியம் செய்ததைப் பெரிதாகச்சொல்லிப் பரிகாசம் பண்ணுகிறாயா? உன்னையும் என்தேசத்து மனிதர்களையும் வாஸ்தவமாகவே சமாதானப்படுத்தினேன். அற்பவிஷயத்தைக் குறித்து, நீங்கள் ஒருவரோடொருவர் யுத்தஞ்செய்ய நினைத்தது எனக்கு விசனமாயிருக்கிறது.

பாஸ்து:—அற்பவிஷயமா! நான் எவ்வளவோ பெரிதாய் நினைத்துக்கொண்டிருந்தேன். இப்பொழுதும் அவ்வண்ணமே நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

பிரெஞ்சு :—எப்படியிருந்தாலும் அது விஷயமாக ஒருவரோடொருவர் கத்தியைக் கையிற்பிடித்துச் சண்டைசெய்ய நினைத்தது வருத்தமாயிருக்கிறது. சண்டை செய்தால் இருவர்களும் இறந்திருப்பீர்கள். அல்லது ஒருவராவது நிச்சயமாக இறந்திருப்பீர்களே.

இயாக் :—யாது காரணமாகச் சண்டை செய்ய நினைத்தார்கள் ?

பிரெஞ்சு :—சொல்லுவதற்குத் தடையில்லை. நேற்றையதினம் நம்முடைய மாதர்களைப்புகழ்ந்துரைத்து, அதினால் தர்க்கம் வந்ததுபோல, பிராஞ்சு தேசத்திலும் ஒருதர்க்கம் வந்தது. அப்பொழுது பிராஞ்சுதேசத்து மாதர்கள் எல்லாரிலும் இவனுடைய பத்தினி அதிக ரூபவதியாயும், களங்கமில்லாமலும், ஞானமுள்ளவளாயும், அதிகப் பதிவிரதையாயும், எப்பொழுதும் பர்த்தாவுக்கு அதிக விசுவாசமுள்ளவளாயும், ஒருவராலும் கற்பழியக் கூடாதவளுமாயிருக்கிறதாய்ச் சொன்னான். அதுதான் காரணமே தவிர வேறொன்றுமில்லை.

இயாக் :—ஒன்றில் அவன் பத்தினி இப்பொழுது இறந்துபோயிருக்க வேணும், அல்லது இவனுடைய அபிப்பிராயம் பொய்யாயிருக்க வேணும்.

பாஸ்து :—என்னசொல்லுகிறாய்? அவளுடைய கற்பு ஒருபொழுதுமழியவில்லை. என்னுடைய அபிப்பிராயமும் கொஞ்சமாவது பொய்யாகாது.

இயாக் :—எப்படியிருந்தாலும் இட்டாலியா தேசத்து மாதர்களைப்பார்க்கிலும் அவள் அதிக நல்லவளென்று சொல்லவேண்டாம்.

பாஸ்து :—கலியாணமாகிறதற்குமுன் பிராஞ்சு தேசத்தில் சொன்னேன். கலியாணமான பிறகு இப்பொழுது பின்வாங்குவேனோ?

இயாக் :—இட்டாலியா, ப்ரிட்டன் தேசத்து மாதர்கள், சமமாய் ரூபவதிகளாயும் நல்லவர்களாயுமிருக்கிறார்களென்று சொல்வதே அதிகமாய்ப் போய்விட்டது. இப்படியிருக்க, உன்னுடைய மோதிரம் மற்ற மோதிரங்களைப்பார்க்கிலும் விசேஷமாயிருப்பதுபோல, உன்னுடைய பத்தினியும் அதிகசிறந்தவளென்று சொல்வதை நான் சிறிதேனும் நம்பமாட்டேன்.

பாஸ்து :—நான் அவளை மனசில் மதித்தபடியே சொல்லுகிறேன். அதே மாதிரியாக இம்மோதிரத்தையும் மதிக்கிறேன்.

இயாக் :—அருந்ததிக்கொப்பென்று சொல்லுகிற உன்மனைவி, ஒன்றில் இறந்துபோயிருக்க வேண்டியது, அல்லது ஒன்றுமில்லாதிருக்க,

அவளுடைய குணங்களை அதிகப்பெரிதாகச் சொல்லியிருக்கவேண்டியது.

பாஸ்து:—அவள் தேவலோகத்திலிருக்கிற மாதர்களுக்குச்சமானமாவாள் அவளை தேவர்கள்தான்எனக்குத் தந்தார்கள்.

இயாக்:—அப்படியா நினைத்தாய். பேருக்குமாத்திரம் அவளை, யுன்மனைவியாக வைத்துக்கொள்ளவேணும். அன்னப்பறவைகள் ஒரு குளத்தில் வந்து நிற்காதா? அதே மாதிரியாக வஞ்சகர்களோ திருடர்களோ வந்து உன் மனைவியைக்கவர்ந்து அவள் கற்பையழிக்கமாட்டார்களா? அதற்காக எத்தனைபேர்கள் சமயம்பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ! எவரால் அறியக்கூடும்?

பாஸ்து:—இட்டாலியா தேசத்தில் அப்பேர்ப்பட்ட சாமர்த்தியமுள்ள வஞ்சகர்கள் இருக்கமாட்டார்கள். இருந்தாலும் என்பத்தினியின் கற்பையழிக்க அவர்களால் முடியாது. இட்டாலியா தேசத்தில் எவ்வளவோ திருடர்களிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய மோதிரத்தைப் பற்றியாவது, பத்தினியின் கற்பைப்பற்றியாவது எனக்குக் கொஞ்சமாகிலும் பயமில்லை.

பிலாரியோ:—கனவான்களே! இந்த விஷயமாகச் சம்பாஷித்தது போதும்.

பாஸ்து:—எனக்கு விரோதமில்லை. இவனைப்பார்த்தது முதல் நாங்கள் இஷ்டர்கள் தான், நாங்கள் அன்னியர்களல்ல.

இயாக்:—உன்னுடைய மனைவியும் நானும் சிநேகிதர்கள் ஆகிறதற்குச சமயங்கிடைத்தால்,அவள் கற்பையழித்து அவமானப்படுத்துகிறேன்.

பாஸ்து:—உன்னால் முடியாது. நிச்சயமாக நினைத்துக்கொள்.

இயாக்:—அவ்விதமா நினைத்தாய். நான் சொன்னவற்றை ஸ்தாபிக்க, என்னுடைய சொத்தில் பாதியைப் பந்தயமாக வைக்கிறேன். ஆனால் நீ கோபித்துக்கொள்ளவேண்டாம். உலகத்திலுள்ள எந்த மாதரை காட்டினாலும் அவள் கற்பையழிக்கிறேன்.

பாஸ்து:—வீணாய் ஏமாந்துபோகாதே. இதைச்சொன்னதற்காக நீ தண்டனையடைவாய்.

பிலாரி:—கனவான்களே! இவ்வளவுபோதும். வந்ததுபோல இப்பொழுதே நிறுத்தி ஒருவரோடொருவர் இஷ்டமாயிருங்கள்.

இயாக்:—நான் சொன்னவற்றை ஸ்தாபிக்க என்னுடைய சொத்துமாத்திர மல்ல; என்னுடைய அயலான் சொத்தையும் பந்தயம் வைக்கிறேன் எனக்கு அவ்வளவு நிச்சயமில்லையா.

பாஸ்து:—நல்லது. எந்த மாதரின் கற்பையழிக்க விரும்புகிருய் சொல்.

இயாக்:—உன்னுடைய பத்தினியின் கற்பைத்தான் அழிக்க நினைத்திருக் கிறேன். வேறேயொருவரையுமல்ல. உன்னுடைய மனைவியைக் கண்டு பேசுகிறதற்கு ஒரு கடிதம் தந்தால், உடனே அவள் பதிவிரதா தரு மத்தைக்கெடுத்து அடையாளங்கள் கொண்டுவருகிறேன். இதை நிச்சயப்படுத்த உன்னுடைய மோதிரத்துக்குப்பதிலாக பதினயிரம் டக்கட்டுகளை * ப்பந்தயம் வைக்கிறேன்.

பாஸ்து:—உன்னுடைய தங்கத்துக்குப் பதிலாக நானும் தங்கத்தைப் பந் தயம் வைக்கிறேன். என்னுடைய விரலைப்போல இம்மோதிரத்தை அதிகப் பிரியமாய் நினைத்துக் கொண்டிருக்கிறதினால் அதைத்தர மாட்டேன்.

வி. கோபால ஐயங்கார் B. A.

## புற்புலத்துநெட்டிலிங்கமையர் வைபவம்.

(52-ம் பக்கத்தொடர்ச்சி).

### இரண்டாம் அத்தியாயம்: புற்புலம்.

புற்புலத்தில் புன்செய்க்காடு அதிகம் என்று நாம் முன்னமே சொன்னோமே. அக்காடுகளில் பருத்தியும் ஆமணக்கும் சேர்ந்துவிதைக்கப்பட்டிருக்கும். பருத்தி துப்பட்டி செய்வதற்கும் ஆமணக்கு இரவில் எண்ணெய் எரிப்பதற்கும் உடையார்களுக்கு முக்கிய பிரயோஜனம்; இவைகளன்றி கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, துவரை, மொச்சைஇவைகளும் வெகு அபரிமிதம். மாசூல் காலத்தில் மொச்சைக்காட்டில் புகுந்து விட்டால்கம்மென்று ஒரே வாசனையாய்வீசும். அக்காலத்தில் களத்தைக்காப்பவர்கள் ஒருமட்பாண்டத்தில் பச்சைமொச்சைக்காயை நிரம்பப்போட்டு ஜலம்விட்டு கொஞ்சம் ஒருபலத்துக்குக்குறையாமல் உப்புசேர்த்து வாயில் வைக்கோலடைத்து களத்திலேயே மூன்று கற்களின்மேல் தீமூட்டிவைத்து வேகவிட்டு புசிக்காதவர்கள் புற்புலத்திலேயே கிடையாது. அவ்வளவுருசியுள்ளவும் வாசனையுள்ளவுமான மொச்சைக்காய் புற்புலத்தில் உண்டாகின்றதென்பது பிரசித்தம்.

*டக்கட்டு” ஓர்வித நாணயம்.

புற்புலத்தில் இரண்டுகோவில்களுண்டு. ஒன்று சங்கிலிகருப்பன் கோவில். இது கிராமதேவதையின் ஆலயம், உடையார்களுக்கும் புற்புலத்திலுள்ள மற்ற எல்லோருக்கும் சங்கிலிகருப்பனிடம் வெகுபக்தி. இதற்கு வருஷாந்திரத்தில் ஒரு பெரிய திருவிழா. மற்ற நாட்களில் பூசையுண்டு. இந்தக்கோவில் புற்புலத்தின் பெரிய ஏரிக்கரையில் ஒருதோப்பிலிருக்கிறது. ஏரிக்குக்கரையிலேயே அந்த தெய்வம் இரவுகாலத்தில் நகர்வலம் வருவதற்காக ஒரு பெரிய யானையும் குதிரையும் கோவிலைப்பார்த்து நிற்க செங்கல்லால் வெகு அழகாய்க்கட்டப்பட்டிருக்கின்றன. கோவிலுக்கருகாமையில் அநேக சங்கிலிகளடித்த மரங்கள் உண்டு. தெய்வத்தின் பெயரே சங்கிலிகருப்பன். அவருக்கு சங்கிலிக்குக்குறைவா! புற்புலம்வெகு ஆரோக்கியமான ஊர். ஒருவருக்காவது தலைவலி என்றுகூட வருகிறதில்லை. அதவா தப்பித்தவறி வந்துவிட்டாலோ அதை சங்கிலிக்கருப்பின் குற்றமென்றே சொல்லுவார்களேயல்லது வேறுவிதமாய்ஒருவரும் சொல்லமாட்டார்கள். உடனே இதுவரையில் ஏதாவது ஒரு காரணத்தால் நின்றிருந்த பிரார்த்தனைகளை அத்தெய்வத்துக்கு நிறைவேற்றுவார்கள். வியாதிகளும் தீர்ந்துவிடும். அப்படி யடங்காமல் வியாதி மும்மரமானாலோ குறி கேட்பார்கள். குறி சொல்லும் சங்கிலிக் கருப்பன் கோவில் பூசாரி ஸ்நானம் செய்துவிட்டு நாருமடி கட்டி நெற்றியில் திருநீறு பூசி கையில் உடுக்கைப்பிடித்து கருப்புக்கு எதிர்முகமாய் உட்கார்ந்து கேட்பவர்கள் காதுகள் பொளிக்துபோகும்படிஒரு உறுமுஉறுமிக்கொண்டு உடுக்கையை ஓயாப்பாட்டுடன் சலிக்காமல் ஒரு நாழிகை அடித்து ஓய்வான். உடுக்கு நின்றதும் அவன்மேல்சுவாமி வந்துவிடும். இது சன்னதம் வருவதென்றும் சொல்வார்கள். அப்படி வந்தவுடன் குறிகேட்க காத்திருக்கும் மனிதன் காணிக்கையைச் செலுத்தி சாமி! அடே என்னைப்பெற்ற சாமி! எம்மவன் படுத்த படுக்கையாக் கிடக்கிராண்டா! பருக்கை என்பதுபத்துநாளாகக் கிடையாது! அவ்வளவு பாலுமட்டும் இறங்கிக்கொண்டு வருகிறது! அவன் ஒம்புள்ளேடா! அவனை எனக்குக் காப்பாற்றிக் கொடுப்பயா, மாட்டையா! அடே சாமி! ஒருகுற்றமும் செய்யலேடா! போன அறுப்பிலே கூட முதலில் சாமிக்கு முக்கலமளந்துவிட்டுத்தான் கூலிகூட கொடுத்தேன்!" என்று சொல்லி கண்ணுங்கண்ணீருமாய் நிற்பான். உடனே பூசாரி உடுக்கையடித்து அவனுக்கு மறுமொழி பின்வருமாறு அளிப்பான்:—

கேளப்பா கருப்புடையான், கேளு !
காவேரிக்கப்பாலே கருப்பூர்,
கருப்பூரில் பெண்ணை நீ கொண்டாய்,

கொண்டாலும் பாவாடை எனக்கு
ஒன்றேனும் கொடுத்தாய் நீ யில்லை
அத்தாற்றனவனை நான் பிடித்தேன்
நாளைக்குள் பாவாடை வந்தால்
நல்லதாய் உன் காலம் முடியும்.
இன்னும் நீ கேளப்பா சொன்னேன்
பங்குனியில்திருவிழா என்று
நன்றாய் நீ அறிவாயே, அப்பா !
அப்போது ஆட்டுக்கிடா மூன்று
அத்துடன் வெண்பட்டு ஒன்று
கொண்டு தான் வந்து நீ என்முன்
வைத்தாலோ பயமொன்றும் இல்லை
பயப்படாதே கருப்பண்ணே சொன்னேன்
என்காட்டில் துன்பமும் உண்டோ!
தைரியமாய் வீடு நீ போய்வா.

என்ற இந்தக் குறிசொல்லி முடிந்ததும் கருப்புடையான் கண்களில் நீர் ததும்ப அப்போதே அரை ரூபாய்க்கு ஒரு பாவாடைபோட புத்தி மயங்கிப்போனேன். சாமி! ஒரு பாவாடைக்கு ஒன்பது பாவாடை போடு கிறேன். வெண்பட்டு ஒன்றாய்ப் போகமாட்டாது. கிடா மூன்றுக்கு முப் பது கொடுக்கிறேன். என்மவன் பிழைத்தாற்போதும் என்பான். உடனே மறுபடி பூசாரி உடுக்கைத்தட்டி;—

பயமில்லை பயமில்லை போ நீ
பச்சரிசி நொய்யை நீ எடுத்து
புனப்பாகம் செய்து தான் கொடுத்தால்
பலமுந்தான் வந்துந்தன் பையன்
முறுக்காக எழுந்து தான் நிற்பான் என்பான்.

கருப்பண்ணனும் அடே சாமிக்குப் புனப்பாகம் கூடத்தெரியுதுடா என்று சொல்லிக்கொண்டு திருநீற்றை வாங்கிப்போவான். அவன் குழந் தையும் எந்த மாகாத்துமியமோ, குறியோ, ஔஷதமோ பிழைக்கும். நூற் றில் பத்து போவதுமுண்டு. அதுவும் தெய்வ குற்றமென்றே சொல்வார் கள்.

இந்த புற்புலத்தில் சங்கிலிக் கருப்பு கோவிலைத்தவிர மற்றொரு கோ விலுண்டு. அது வெகு பழைய சிவாலயம். கொஞ்சம் பிராமணர்கள் அதிக மாயிருந்த காலத்திலிந்த ஆலயமும் நல்ல ஸிதியிலிருந்திருக்கும். இப்

போது வெகு ஜீரணித்துப் போய்விட்டதுஎன்றாலும் பழைய சோழக்கட்டடமாகையால் வெகு அலங்காரமாயிருக்கும். சங்கிலிக்கருப்பினிடம்அதிக பக்தி புற்புலத்திய உடையான்களுக்கு இருந்தபோதிலும் சிவதர்மம்குறைவு படக்கூடாதென்று அந்தக் கோவிலையும் ரட்சித்து வருகிறார்கள்.

இம்மாதிரியாய் புற்புலம் ஒரு விந்தையான கிராமம். குன்றுகளும் குளங்களும், காடுகளும், மேடுகளும், நன்செய்களும், புன்செய்களும், ஆடுகளும்,மாடுகளும், கோவில்களும், சோலைகளும், தோப்புகளும்,துரவுகளும் நிறைந்த வெகு சௌக்யமும் நேத்திரானந்தமும் ஆரோக்கியமுமான கிராமம். இக்கிராமத்தில் நான்கு பிராமணர்கள் வீடு அடங்கிய அக்கிரகாரம் என்று சொல்லப்பட்ட ஒரு சிறு தெருவு ஒன்றுண்டு. இதையும் இவ்வந்தணர்களையும் பற்றி அடுத்த அத்தியாயத்தில் சொல்லுவோம்.

### மூன்றாம் அத்தியாயம் வக்கமையர்.

இப்புற்புலத்தில் அக்கிரகாரம் ஒன்று உண்டு என்றும் அதில் மூன்று நான்கு வீடுகள் உளவென்றும் நாம் முன்னமே சொல்லியிருக்கிறோம். மேலும் அவர்களுக்கு மூல புருஷனான ஒருவனுக்கு அக்கிராமம் பழையகாலத்து அரசர்களால் மாடுமேய்க்க விடப்பட்டகிராமம்என்றும் சொல்லியிருக்கிறோம். அவ்வந்தணர் யார்? அப்படி அவருக்கு மாடு மேய்க்க் இக்கிராமத்தைக்கொடுத்த அரசன்யார்? இவைகளைப்பற்றி சுருக்கமாய் சற்று விசாரிப்போம்.

நமது கதை தொடங்கும் 200 வருஷத்திற்கு முன்னால் பெருஞ்சீரகவல்லியில் ஒரு பெரிய துருக்க பிரபு அரசாண்டுவந்தார். அவர் மகா தயாளு. மகமதிய சாஸ்திரப்பிரகாரம் நான்கு பெண்ஜாதிகளுக்குக்குறையாமல் ஒருவன் விவாகம்பண்ணிக்கொள்ளலாம் என்றிருந்தபோதிலும் ஏகபத்னீவிரதர். குடிகளிடம் வெகு அன்பு. கொரானை கையில் கொடுத்து மகம்மதியனில்லாத ஒவ்வொருவனையும் துருக்கனாக்கவேண்டியது மகம்மதிய அரசர்கள் தொழிலாயிருந்தபோதிலும்,அவர் அப்படி தன் மனிதர்கள் செய்ய எத்தனித்தால் கண்டிப்பார். எந்தமதத்தில் என்னரகஸ்யமிருக்குமோ! தானாய்க்கனியாதது தடிகொண்டடித்தால் கனியுமா. ஒருவனை பலாத்காரம்பண்ணி ஒரு மதத்தை விட்டு மற்றொரு மதத்துக்கு ஓடச்சொல்லுவதில் என்னலாபம், அவனாக இஷ்டப்பட்டு வந்தால் வரட்டும்; இல்லையெனில் வேண்டாம்; என்று தனது மதத்தை அபிவிருத்தி பண்ண நியமிக்கப்பட்டவர்களுக்கு கட்டளையிட்டார். அவர் காலத்தில் அம்மதாபிமானிகள் மகமதியமதத்தை பிரஸங்கம் மட்டில் செய்வார்களே யன்றி ஒருவரையும், நீ துருக்கனாகவேண்டும் என்று இம்சிக்கமாட்டார்கள். இந்த சிற்ற

ரசனின் பெயர் குஷால் சைதுல்லா. ஹிந்து மதத்தில் இவருக்குக் கொஞ்ச மபிமானமுண்டு. ஸாவகாசப்பட்டபோது ஒரு வேதியனை அழைத்துதன்னிடம் உட்காரவைத்துக்கொண்டு த்வைதம் என்றால் என்ன அத்வைதம் என்றால் என்ன. அத்வைதத்துக்கும் துவைதத்துக்கும் வித்யாஸம் யாது என்று விசாரிப்பார். அவ்வந்தணன் சொல்லுவதைக் கவனமாய்க் கேட்பார். நான்என்னமோ எண்ணியிருந்தேன். நீங்கள் சொல்வதை எல்லாம் பார்த்தால் நமதுபயம்பர்முகம்மது சொல்லியிருக்கிறபடியே இருக்கிறது. ஸம்ஸ்கிருதம் கேட்டால் துலுக்குப்போலேயிருக்கிறது. இந்த தமிழ்தான் மூக்கால் குணகுண என்று சப்திக்கிறது. ஸம்ஸ்கிருதம் நன்றாயிருக்கிறது என்பார். குஷால் சைதுல்லாவுக்கு பிராமணரிடமும் அவர்கள் மதத்தினிடமும் வெகு விசுவாசம். சிரகத்தீவிலிருக்கும்சிவாலயங்களுக்கும் விஷ்ணுவாலயங்களுக்கும் அவர் கொடுத்திருக்கிற நகைகளையும் பாத்திரங்களையும் இன்றைக்கும் அவர் பெயருடன் காணலாம். குடிகளிடமும் வெகுவிசுவாசம். நன்றாய்விளையாத வருஷங்களில் கடமைகளைக்குறைத்துவாங்குவார். இவர் ராஜ்யத்தில் சோதனைக்குச்சென்றால் ஜனங்களுக்கு ஒருவிதஉபத்திரவமுமில்லை. ஆனால்கர்னடக ஸம்பிரதாயப்படி இவர் வெளிக்கிளம்பினால் ஒரு ஊரே வெளிக்கிளம்புவதுபோலிருக்கும். இவர் கூடாரமடித்தால் அதற்கடுத்தாற்போல் கடைகளும் கடைத்தெருவுகளுமாய் கூடாரங்களடிக்கப்பட்டு வியாபாரங்கள் நடப்பதும் ஜனங்கள் வருவதும் போவதுமாயிருக்கும். கடைத்தெருவு மாத்திரமல்ல ஒருபக்கம் நாடகசாலை, ஒருபக்கம் வாத்தியமும், ஒருபக்கம் புஷ்பக்கடை, தின்பண்டங்கள் சாலை இவ்விதமாய் தன் நகரம் சிரகவல்லி, எப்படியோ அப்படியே ஒரு சிறுஞ் சிரகவல்லியே இவருடன் நகருவதுபோலிருக்கும். இதைக் கேவலம் டாம்பீகம் என்று எண்ணிவிடக்கூடாது. விசேஷ நாகரீகமற்ற அக்காலங்களில் இம்மாதிரி அரசன் வெளிப்போகுங் காலங்களில் நகரத்தின் வியாபாரம் நாட்டுக்குள் பரவவும் நாட்டுச்சரக்குகள் நகரத்தில் வந்து சேரவும் இவைகள் காரணமாயிருந்தன.

எக்காலத்திலும் எத்தேசத்திலும் துருக்க ராஜாக்களிடத்தில் பிராமணர்கள் விசேஷமாய் மந்திரிகளாக விருந்தார்கள். அதே கிரமத்தையனுசரித்து குஷால் சைதுல்லாவும் தன் காலத்தில் தான் ஒரந்தணரை மந்திரியாக வைத்துக்கொண்டார். இப்படி வைத்துக் கொள்ளப்பட்டவருடைய திருநாமம் வக்கமையர். இவரைப்பற்றி ஜனங்கள் வெகு அற்புதமான கதைகள் சொல்லுவார்கள். சாஸ்திரத்தில் வெகு பிரஸித்தராம். துலுக்கு, மகாராஷ்டிரம், தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்கிருதம், இந்த பாஷைகளில், வெகு தேர்ச்சியடைந்தவர். இவர் வீட்டு கட்டுமுளைகளுங்கூட இந்த பாஷைகள்

பேசுமென்று புற்புலத்து ஜனங்கள் இன்றைக்கும் சொல்லுவார்கள். இத்துடன் இவர் வெகு கர்மாநுஷ்டாராம். இவர் உதயத்துக்கு முன் ஸ்நானம் தப்பினதினம் ஒருநாளாவது கிடையாது. சிராவணத் தன்றைய தினம் ஏழு உத்தரணி தீர்த்தமும் 7 - எள்ளும் சாப்பிட்டுவிட்டு உபவாஸமாயிருப்பார். இவர் மேனி செக்கச்செவேர் என்று பிர்மதேஜஸ் சொட்டும். பிரதிதினமும் பிரதோஷகாலத்தில் சிவதர்சனம் செய்யாமலிருக்கமாட்டார். அக்கினி ஹோத்ரீ. இவ்வளவுதூரம் பிராமண கிருத்தியத்தில் சரிவர நடக்கிறவராகவிருந்தும் ராஜகாரியத்தில் ஒரு முந்திரையேனும் பிசகமாட்டார். பெரிய அந்தஸ்து என்று கௌரவம் என்பதே கிடையாது. வித்தையில் பாரங்கதராயிருப்பினும் செருக்கு எள்ளளவுமவரிடமிருந்ததேயில்லை. தனது யஜமானனைப்போல் தானும் ஏகபத்னீவிரதர். திடகாத்திரர். காதவழி இரண்டு நாழிகையில் நடப்பார். ஒரு நிமிஷம் வீண்போது போக்கார். இவருடைய தேகம் சுக்குப்போல் கெட்டிப்பட்டு கைகளும் கால்களும் சதைப்பசையை வெளியில் எடுத்துக்காட்டும். இவருக்கு மழை, காற்று, வெய்யில், ஒன்றும் லட்சியமேயில்லை. அப்படியே பசியும். ராஜகாரியமோ தேவகாரியமோ தவறாது நடக்கவேண்டுமென்கிற ஆவல் ஒன்றைத்தவிர வேறு கவலை இவருக்கு ஒன்றுங்கிடையாது. இம்மாதிரி சகலவித உத்தம லட்சணங்கள் பொருந்திய வக்கனமையர் என்பவர் குஷால்சைதுல்லாவுக்கு மந்திரியாயிருந்தார். அப்படியவரிருந்தகாலத்தில் தான் யாதோ ஒரு ராஜகாரியத்தால் அந்த அரசன் அதிக சந்தோஷமடைந்து புற்புலத்தை வக்கனமையருக்குஅவருடைய மாடு மேய்ப்பதற்காக அவருக்குத்தானஞ்செய்தது. மாடுமேய்ப்பதற்கே இந்த ஒரு கிராமத்தைவிட்ட அந்த அரசன் அவருடைய மற்ற சௌகரியங்களுக்கு இன்னும்எவ்வளவு கொடைகள் கொடுத்திருக்க மாட்டான்! ஆனாலவைகள் நமது கணக்கிலகப்படவில்லை. அகப்பட்டாலும் புற்புலத்தைப்பற்றி மட்டில் நமது கதையில் நாம் சொல்ல இப்போது பாத்தியப்பட்டவர்களேயல்லது மற்றவைகளை இங்கு எடுத்துரைப்பதும் நமது காரியமல்ல. நிற்க இவ்வளவினும் புற்புலமென்பது குஷால் சைதுல்லாவால் வக்கனமையருடைய மாடு மேய்ப்பதற்காக விடப்பட்ட கிராமம்; விசேஷமாய் புல்லும் காடும் ஏரியும் ஓடையும் வற்றாக்குளங்களு மிங்கிருந்தமையாலிந்த ஊர் சீரகவல்லி அரசனின் மந்திரிக்கு மாடுமேய்க்க விடப்பட்டது. அவர் அந்த ஊரில் தனது சில பந்துக்களைக் குடிவைத்து காடுகரைகள் சாஸ்தியாயிருந்தபடியால்அவைகளைச்சீர் செய்து புலங்களாகப்பண்ண உடையார்களையும் அங்கு கொண்டுவந்து வைத்தார்.

இவ்வளவு தூரம் சொல்லிவிட்டு புற்புலத்து அந்தணர்களுக்கு மூல புருஷனான வக்கமையர் முடிவையும் ஒருவிதமாய் சுருக்கிச்சொல்லி முடித்து நமது கதையைநடத்துவோம். வக்கமையர் வெகு தேசஸ்வி; பார்ப்பதற்கு வெகு லட்சணமுள்ளவர் என்று சொன்னோமே. அவரைக் கண்டு அரண்மனையிலிருந்த இரண்டொரு ஸ்திரீகள் மோகித்து அதுமூலமாய் அவர்கள் கொண்டகருத்துக்கு அவரிசையாமற்போக அந்த பெண்பிள்ளைகளின் பிரேரேபணையாலிவர் மாண்டார் என்கிறார்கள் சிலர். இன்னும் சிலர் வக்கமையர் மந்திரியாய் வந்தகாலம் முதல் குஷால் சைதுல்லா அத்வைதத்தில் அபிமானித்து துருக்கு ஜாதியார்களுக்கு உடன் பிறப்பான ஹிந்து மதத்துவேஷமில்லாதவனாயிருந்தபடியால் சில பிரபலமான அரண்மனைத் துலுக்கர்களுடைய பிரேரேபணையால் வக்கமையர் மாண்டார் என்றார்கள் சிலர். இவ்விரண்டு காரணங்களுள் பிற்கூறிய காரணமே சரியான காரணமாயிருக்கலாம். முகாந்திரம் எதாயிருப்பினும் இவர் மாண்ட விதம் ஒன்றே. இவர் ஒருநாள் சோமவாரம் பிரதோஷத்தன்று சிவதரிசனம் செய்து திரும்பிவருங்கால் நந்திபெருமானுக்கு பின்நின்று வணங்கி 'ஓம் ஹர' "ஓம் ஹர" என்று சிவபெருமானை வடமொழியால் வாழ்த்துகையில் அவ்விடம் முன் யோசனைசெய்து பதுங்கியிருந்த ஒன்பது துலுக்கர்கள் இவரை ஈட்டியால் ஒன்பது ஸ்தலங்களில் குத்தி மாய்த்தார்கள். அவ்வளவு தான். பின்னால் குஷால்சைதுல்லா என்னதான் துக்கப்பட்டால் என்ன. அந்த ஒன்பது காதகர்களை என்ன விதமாய் தண்டனை செய்தாற்றானென்ன? ஸர்வவிதத்திலும் உத்தமராய் விளங்கின ஒரு பிராணி போய்விட்டார்; இவ்விதமாய் வெகு யசசுடன் சகலவித வித்தைகளுக்கும், அதிகாரங்களுக்கும், தர்மங்களுக்கும்,கர்மங்களுக்கும் இருப்பிடமாயிருந்து விசித்திரமாய் மடிந்த வக்கமையர் என்பவர் புற்புலத்திலிருந்தஅரிய அந்தணர்களுக்கு மூல புருஷர்.

மாதர் மித்திரன்.

---

## யுத்தம்.

ஆங்கிலேயர் போவர்களுடன் தொடர்ச்சியாய் யுத்தம் செய்து அவர்களை ஒவ்வொரிடத்திலும் ஜெயித்துக்கொண்டே வருகிறார்கள். ப்ரீஸ்டேட்டை ஆங்கிலேயர் கைவசமாக்கிக்கொண்டு பிரிடிஷ்கொடியை நாட்டிவிட்டார்கள்; பின்பு 10,000 போவர்கள் டிரான்ஸ்வாலுக்கு முக்கியபட்டணமாகிய பிரிடோரியாவில் பகைவரை எதிர்த்துச்சண்டைசெய்யத் தயாராயிருக்கையில் பேர்போன போர்வீரராகிய லார்ட் ராபர்ட்ஸ்அவர்களுடன் யுத்தம் செய்து அவர்கள் முக்கிய பட்டணத்தைப்பிடித்துக்கொண்டு

போவர்களை 2000 கஜத்திற்கு அப்பால் ஒட்டியடித்து விட்டார்கள். பிரிடோரியாவில் லார்ட்ராபார்ட்ஸ் குதூகலத்துடன் நுழைந்து ஜெயபேரிகையுடன் பிரிடிஷ்கொடியை நாட்டினார். இச்சங்கதி எங்கும் பரவவே நமது சென்னையில் 9-ந்தேதி சனிக்கிழமையதினம் சாயங்காலம் சுமார் 50 ஐரோப்பிய கனவான்களும், மாதர்களும், அழகான உடுப்புகளைத்தரித்துக்கொண்டு பைசிகிளுக்கு புஷ்பங்களால் அலங்கரித்து இருபக்கத்திலும் இரண்டுகொடிகளை நாட்டி அதிக உற்சாகத்துடன் செனட்ஹவுசிலிருந்து கோட்டைவரைக்கும் வரிசையாகச் சென்றனர்கள். 11வ திங்கட்கிழமையன்று இச்சந்தோஷத்தைக்கொண்டாட இந்தியாவிலுள்ள எல்லா கவர்ன்மெண்டு ஆபீசு உத்தியோகஸ்தர்களுக்கு விடுமுறையளிக்கப்பட்டது. அன்று சாயங்காலம் முனிசிபாலிடி பிரசிடெண்டு **லெப்டினெண்டு கர்னல் ஸர்ஜார்ஜ்மூர்** துரையவர்களும் இன்னும் சிலரும் சேர்ந்து கையொப்பம் சேர்த்து சுமார் 9-மணிக்கு மன்றோசிலைக்கருகில் சுமார் 1000 ரூபா மதிப்புள்ள வாணவேடிக்கைகளைச் செய்தார்கள். இதில் **பான்பயர்** என்ற வாணம் அதிகவேடிக்கையாகவும் அதிசயமாகவுமிருந்தது. இவ்வேடிக்கைகளைப் பார்க்க இந்து, மகமதீய, ஐரோப்பிய, பாரசீக கனவான்களும், மாதர்களும் குழந்தைகளுடன் வந்திருந்தார்கள். **பி. வெங்கிடாசலம் கம்பெனியார்** கவர்னர்தோட்டத்திலிருந்து பிராட்வேயிலிருக்கும் தங்கள் ஷாப்வரையிலும் விளக்குகள் ஏற்றிவைத்ததுடன் 5 தினம்அநேக ஏழைகளுக்கு அன்னமளித்தார்கள். நிற்க ஆங்கிலேயர் இன்னும் கூடிய சீக்கிறத்தில் போவர்களை ஜெயித்து அவர்கள் நாடுமுழுவதையும் கைப்பற்றி ஜயபேரிகையுடன் பிரிடிஷ்சிம்மக்கொடியை நாட்டும்படி ஈசன் அருள்புரிவாராக.

## ரோமேனியாதேசத்து அரசி.

மேமீ 9வ **மேயில்** பத்திரிகையில் பிரதிதினமும் அதிகாலையில் தூங்கியெழும் வழக்கத்தின் நன்மைக்குத் திருஷ்டாந்தங்களாக இரண்டு பெயர் பெற்ற ஐரோப்பியரின் சரித்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. சுதேசமித்திரன் பத்திராசிரியர் வெகு தெளிவாக எழுதியிருந்தவைகளில் இங்கு ரோமேனியா தேசத்து அரசியைப்பற்றி சிலவற்றைப் பிரசுரிக்கிறோம். ஐரோபாவின் கீழ்பாகத்தில், ஆதியில் துருக்கி தேசத்தின் பாகமாய், இப்போது சுவாதீனம் பெற்றிருக்கும், ரோமேனியா நாட்டுக்கு அரசி, சுமார் 20 வருஷமாக இந்த உயர்பதவியில் வாழ்ந்தும், இப்போது 57 வயதாகியும், மகா கலைவல்லோராய், ஐரோபிய பாஷைகள் பலவற்றைக் கற்று, மாதாந்திரப் பத்திரிகைகளுக்குப் பெரும் விஷயங்களைப்பற்றி வியாசங்கள் எழுதுவதும், அல்லது தாமாகவே அநேக நூல்கள் வரைந்து பிரசுரிப்பதுமாகக் காலங் கழித்து வருகிறார். இவர் வீண்காலம் போக்கும் இயல்புள்ளவரல்லவாகையால், தாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் காலவரையறைக் குட்படுத்தி மற்றவர்கள் சாதாரணமாய்ச் செய்யும் வேலையைவிடப் பல மடங்கு அதிகமாக வேலையைச் செய்து வருகிறார். இவர் தமது குளிர் தேசத்திலுங்கூட காலமே 4-மணிக்குத் தூக்கத்தினின்று எழுவது வழக்கமாம்; சில சமயங்களில் 3-மணிக்குக்கூட எழுந்துவிடுவார். ஐரோபியர் சாமான்யமாய்க் காலமே 9-மணிக்குத்தான் படுக்கையை விட்டுக் கிளம்புவார்கள். பொதுவாய் குளிர்தேச மென்பது இதற்கொரு நியாயம்; இரண்டாவது, இரவில் கூத்து முதலான வேடிக்கைகள் பார்க்கப்போவதும் குடித்து வெறிகொண்டு உல்லாசமடைவதும் ஐரோபிய ஜனங்களுக்குள் சர்வசாதாரணமாகையால், காலையில் நேரம் பொறுத்தே எழுந்திருப்பார்கள். மேலும், ஐரோபாவின் மேற்குப் பாகங்களில் இருட்டு

க்காலம் அதிகமில்லை. மாலையிலுங் காலையிலுங் மஞ்சள் வெய்யில் என்று நாம் சொல்லுகிறகாலமானது வெகுநேரம் நீண்டிருக்கும். இங்கிலண்டில் மேமாதத்தில் 9-மணிக்கு இருட்டி, 4-மணிக்கு மறுபடியும் வெளிச்சம் வந்துவிடும். இரவில் சாதாரணமாய் 12-மணி ஒருமணி சுமாருக்குத் தூங்கப்போகும் ஜனங்கள் 4-மணிக்கெழுவது சகஜமல்லவாகையால், வெளிச்சம் வந்தபிற்பாடுந் தூங்குகிற வழக்கம் ஏற்பட்டுவிட்டால், ஒன்பது மணி வரையில் தூங்குவதற்குக் குந்தகமென்ன? ஆனால் குளிர் தேசங்களானாலும், உஷ்ண தேசங்களானாலும், இரவில் ஒருவன் ஒழுங்காய்க் காலத்தைப் போக்கும் பட்சத்தில், காலைநேரத்தில் சீக்கிரம் எழுவதில் தடையிராது. அப்படி எழுவதாலும் தேகத்துக்கு நன்மையே பொழிய தீமையுண்டாவதில்லை. [ரோமேனியாதேசத்து அரிசி செய்து வருவதுபோல நமது மாதர்களும் நடக்க எப்பொழுது முயற்சிசெய்வார்கள்?]

# NEWS & NOTES.

பிரான்சுதேசத்திற்கு பைசகில் வரி, வருடம் 1க்கு 242500 பவுன் கிடைக்கிறது.

பட்டுவேலைக்காக சீனாவில் சுமார் 5,000,000 ஜனங்கள் வேலை செய்துப் பிழைக்கிறார்கள்.

அமெரிக்காவில் மெக்சிகோவில் 6000 வருஷங்களாக ஒரு பெரிய விருக்ஷமிருக்கிறதாம். இதேமாதிரி அமெரிக்காவில் 5700 வருடங்களாக ஒரு விருக்ஷமிருக்கிறது இது இமக்சிகோ விருக்ஷத்திற்கு தம்பி என்று சொல்லலாம்.

பர்மாவிலுள்ளவர்கள் பெண் உருவமிருக்கிற நாணயங்களைத்தான் விசேஷமாகபெற்றுக்கொள்ளுகிறார்களாம். ஆண் உருவமிருக்கிற நாணயங்களை வெறுக்கின்றார்களாம். ஏனெனில் ஆண் உருவமிருக்கிற நாணயங்கள் ஒருவனிடத்திலிருந்தால் அவனுக்கு பணம் சேராதென நம்புகிறார்களாம்.

டிரான்ஸ்வால் யுத்தத்தை நடத்திவருகிற இங்கிலீஷ்ராணுவத்தலைவர்களின் வயதைக்குறிப்பிடுகிறோம். லார்ட்ரோபர்ட்ஸ் 68, சர்ஜார்ஜ்வொயிட் 65, ஜெனரல் க்ளேரி 61, ஜெனரல் புல்லர் 61, ஜெனரல் கெல்லிகெனி 60, ஜெனரல் வாரன் 60, ஜெனரல் கேடகர் 57, லார்ட் மேதுயூன் 55, லார்ட்கிட்சனர் 50, ஜெனரல் பிரன்சு 48.

உலகத்திலே ஐசுவரியமுள்ள அரசர்களுக்குள்ளே சீபதேச அரசரும் ஒருவர். அவருக்கு வருடத்திலே 40 லட்சம் பவுன் வருமானமுண்டு. அவருடைய மாளிகை ஒரு பட்டணத்துக்குச்சரி. அந்த மாளிகையிலே ஏறக்குறைய 5,000 பேர் வசிக்கிறார்கள். நந்தவனமோ 25 ஏக்கரா நில விஸ்தீரணத்தையுடையது. அதைச்சுற்றி 12 அடி உயரமான சுவருண்டு.

திராச்சிராப்பள்ளியில் பிரசுரமாகும் அமிர்தவசனி என்ற ஓர் வாராந்திரப் பத்திரிகை நமது பார்வைக்குவந்து கொண்டிருக்கின்றது; இது மற்றபத்திரிகைகளைப் போலல்லாமல் நீதிஸாரம் என்று தலைப்பிட்டு விசேஷநீதிகளையும் அடிக்கடி பேசிவருகின்றது. மேலும் ராஜாங்க விஷயங்களும் பொது விஷயங்களுமிதில் பலஉள. இப்பத்திரிகையும் இதன் அதிபரும் நீடுழிவாழ ஈசனருள்புரிவாராக.

சீனராஜியத்திலுள்ள கேள்டன் நகரத்திற்கு சமீபத்திலுள்ள ஒரு பௌத்த ஆலயத்தில் ஒரு பெரியமணியிருக்கிறது. இது 18-அடி உயரமிருக்கிறதாம். 45-அடி சுற்றளவிருக்கிறதாம். இது வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கிறது. இது சுமார் 1400 வருடத்தில் சீனசக்கிரவர்த்தி யங்களோ என்பவர் 8-மணிகளையுருக்கி வார்க்கும்படி உத்தரவுசெய்தவைகளிலிது தான் பெரியதென்று சொல்லப்படுகிறது. இப்பூலோகத்தில் இதைவிட பெரிய மணிகிடையாது என்று எண்ணுகிறோம்.

---

அமெரிக்காவிலுள்ள ஐக்கியமாகாணத்தில் அரிஸோனுவில் ஒரு காடிருக்கிறது இது 100 சதுரமையில் விஸ்தீரணமுள்ளது. இதிலுள்ள மரத்துண்டுகளும் மரங்களும் கற்களாக விருக்கின்றன. இந்த மரங்களுக்கு முதலில் என்ன நிறமிருந்ததோ அந்த நிறம் தினுசுதினுசாக ஒவ்வொருகல்லிலும் காணப்படுகிறது. ஒரு மரம் 40 சதுர அடி தூரம் கல்லாகவே பரவியிருக்கிறதாம். இக்காடு வெகு நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்திருக்கவேண்டுமென்றும் அதனால்தான் விருக்ஷங்களெல்லாம் கற்களாக மாறியிருக்கின்றனவென்றும் ஊகிக்கப்படுகிறது.

---

கல்கத்தாவில் மிஸ்டர் பாலித் என்பவரின் குமாரத்தி மிஸ் லிலியன் பாலித் என்ற பெண்மணி சென்ற பி. ஏ. பரீட்சையில் இங்கிலீஷிலும் பிரெஞ்சிலும் முதல் வகுப்பில் தேறியிருக்கிறாள். பிரெஞ்சு பாஷையில் தேறியது இம்மாது ஒருவர்தான். இந்த மாது காலேஜில் படிக்காமல் தானே வீட்டிலிருந்து படித்து மிகமேன்மையாய் இப்பரீட்சையில் தேறியது மிகமெச்சத்தகுந்ததே. இது இந்தமாதின் புத்தி கூர்மையையும், கல்வியில் ஆசையையும் காட்டுகிறதல்லவா. நமது சிறுமிகள் பரீட்சைகளில் தேறாவிடினும் இப்படியல்லவோ வீட்டிலாவது வீண்வம்பு அடிக்காமலும், புருஷனை நகை நகையென்று அடிக்கடி தொந்திரவுசெய்யாமலும் தெய்வபக்தி, நன்னடக்கை, சத்சகவாகம், பெரியோர்களிடத்தில் நடக்கும்விதம், குழந்தைகளைப்பழக்கும்முறை, குடும்பசம்ரக்ஷணை முதலியவைகளைக் கற்றுகல்வியிற்றேறவேண்டும். இதற்கு முயற்சி ஒன்றுதான் அவசியம் வேண்டியது.

---

## விடுகதைகள்.

1. அவளைத்தொடுவானேன் கவலைப்படுவானேன்.

2. ஆழக்குழிதோண்டி அதில் ஒரு முட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் ஆயிரம் முட்டை.

3. கொல்லையில் மஞ்சக்கிளி ஊஞ்சலாடுகிறது.

4. கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம்.

5. திருடனைப் பச்சை வெண்ணெயைத் தடவி முதலுலும்பை உரிக்கிறார்கள் இது என்ன ?

பவானி அம்மாள்.

1. எங்க எருமை சாட்டைக்கொப்பு கத்தாது இறையாது காடேரிமேயாது இருந்த இடத்திலிருந்து இருகலபால் கறக்கும்.

சீதாலக்ஷ்மி அம்மாள்.

---

# மாதர் மனோரஞ்சினி.




பாடசாலையில் கரடிகள் விளையாடுதல்.